**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**
**CC.No. 92 /2019**

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் நாள் திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி– 02, திரு.அந்தோணிசாமி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன்,மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.அந்தோணிசாமி | வயது | : | 55/26 |
| த.பெ/ க.பெ. | : | அருளானந்தம் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | எரவாங்குடி | நிலை | : | LW 03 / PW02 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் )**

**முதல்விசாரணை:**

நான் எரவாங்குடியில் வசித்து , விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

போலீசார் விசாரணையில், கடந் 10.06.2018 ம் தேதி மாலை

நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த அமுல்ராஜ் என்பவரும் சொந்தவேலையாக ஜெயங்கொண்டம் செல்வதற்கு இரவு சுமார் 07.00 மணியளவில் கல்லாத்தூரிலிருந்து எரவாங்குடி செல்லும் தார் சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வடவீக்கம் கல்லறை அருகே வந்துக்கொண்டிருந்தபோது, அதே சாலையில் எங்களுக்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த எங்கள் ஊரைச் சேர்ந்த வின்சென்ட் TVS Super XL இருசக்கர வாகனத்தில் சின்னப்பனை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்தவர் தவறி கீழே விழுந்துவிட்டார் என்றும், அதில் சின்னப்பனுக்கு இடது கை முட்டி, இடது நெற்றி, மூக்கு ஆகியே இடங்களில் பலத்த அடிபட்டு, அவர் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு போக்கு வண்டியின் மூலம் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிக்கு ஆதரவாக வழக்கு சம்பவத்தை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை

/ உண்மை நகல் /

ஒம்/–ப.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.